செ.வெ.எண்:17 நாள்:07.06.2019

## கரூர் மாவட்டம்

## உலக உணவுப் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:

உலக உணவுப்பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்ட உணவு பாதுகாப்புத்துறையின் சார்பில் காந்திகிராமத்தில் புனித தெரசா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இன்று(07.06.2019) நடத்தப்பட்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

ஐக்கிய நாடுகளின் பொதுசபையால், 2019 ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 7-ஆம் நாள் உலக உணவுப் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இந்திய உணவுப் பாதுகாப்பு தர நிர்ணய ஆணையத்தால், இந்தியா முழுவதும் 07.06.2019 அன்று, உலக உணவுப் பாதுகாப்பு தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் கரூர் மாவட்ட உணவுப்பாதுகாப்புத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உணவுப்பொருட்களில் கலப்படங்களை கண்டறிதல், தடைசெய்யப்பட்ட நெகிழிப்பொருட்களை பயன்படுத்துவதால் வரும் தீமைகள், ஆரோக்கியமான உணவுப்பொரட்கள் குறித்த விளக்கங்கள், ஊட்டச்சத்து குறைபாட்டால் ஏற்படும் கேடுகள், செயற்கையாக பழுக்கவைக்கப்பட்ட பழங்களை உட்கொள்வதால் எற்படும் தீமைகள் குறித்தும், அவற்றில் இருந்து தற்காத்துக்கொள்ளும் வழிமுறைகள் குறித்தம் விளக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைவரும் உணவுப்பாதுகாப்பு குறித்த உறுதிமொழிஏற்றனர்.

மாணவிகளும் இந்த அரங்குகளை பார்வையிட்டு அதற்கான விளக்கங்களையும் விரிவாக கேட்டறிந்தனர். அதனைத்தொடர்ந்து தெரசா மேல்நிலைப்பள்ளியில் இருந்து சுமார் 700 மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் பங்கேற்ற மாணவிகள் பாதுகாப்பான சத்தான உணவுப்பொருட்களை உட்கொள்வது குறித்தும், தவறான உணவுப்பழக்கங்களால் ஏற்படும் தீமைகள் குறித்தும் பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் பள்ளி வளாகத்திலிருந்து, சுங்ககேட் வரை சென்று மீண்டும் பள்ளியை வந்தடைந்தனர். அதன்பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், அங்கு வைக்கப்பட்டிருந்த “கையெழுத்து பலகையில்” தமது வாழ்த்துக்களுடன் கையொப்பம் இட்டார். நிகழ்வுகளில் சுமார் 1800-ற்கும் மேற்பட்ட மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் சுமார் 50 பேர், அங்கன்வாடி பணியாளர்கள் சுமார் 100 பேர்களும் பார்வையாளர்களாக பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் உணவுப் பாதுகாப்பு துறையின் மாவட்ட நியமன அலுவலர் மரு.இரா.சசிதீபா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.நிர்மல்சன், கரூர் நகர் நல அலுவலர் மரு.ஸ்ரீப்ரியா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் (தாந்தோனி மற்றும் கரூர்), உணவு வணிகர்கள் சங்க உறுப்பினர்கள், உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் புனித தெரசா மகளிர் மேல்நிலைப்பள்ளி முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**